<u>2026 பிப்ரவரி மாதம் 26– ஆம் தேதி வியாழக்கிழமை</u>

<u>கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி</u>

<u>S.C. நெம்பர் : 49/2025</u>

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26– ஆம் தேதி வியாழக்கிழமை

திரு.P.அறிவழகன்,Translator அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW8 – A.மணிமாறன் |
| தகப்பனார் பெயர்: | அன்புமணி |
| ஊர்: | ஆண்டிபட்டி |
| வட்டம்: | தேனி |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | சார்பு ஆய்வாளர், தேவதானப்பட்டி |
| வயது : | 59 |

26.02.2026

(எதிரி VC மூலம் ஆஜர் செய்யப்பட்டார். எதிரியின் வழக்கறிஞரும் ஆஜர்).

**முதல் விசாரணை:–**

1. நான் தற்சமயம் தேனி மாவட்டம், தேவதானப்பட்டி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 30.11.2024 ஆம் தேதி பிசிபட்டி காவல் நிலையத்தில் காலை 9.30 மணியளவில் பொறுப்பில் இருந்த போது க,விலக்கு அரசு மருத்துவமனையிலிருந்து வரப்பெற்ற தகவலை பெற்று அங்கு சிகிச்சையிலிருந்த பாண்டி மற்றும் அவரது மனைவி வசந்தா இருவரையும் விசாரிக்க சென்றபோது பாண்டி அவசர சிகிச்சை பிரிவில் மயக்க நிலையில் இருந்ததால் அவரது மனைவி வசந்தா வயது 60/2024, கணவர் பெயர் பாண்டி கட்டபொம்மன் தெரு, சடையால்பட்டி, எஸ் வாடிப்பட்டி, தேனி என்பவரை விசாரித்து அவர் கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று காவல் நிலையம்

10.40 மணிக்கு வந்து பிசிபட்டி காவல் நிலைய குற்ற எண்.477/2024, U/s.296(b), 118(1), 125, 109(1), 351(3), 118(2), BNS மற்றும் 4 TNPHW Act ன் படி வழக்கு பதிவு செய்தேன். அந்த அச்சு முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேல் விசாரணைக்காக வழக்கு கோப்புக்களை நிலைய ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –</u>

மருத்துவமனையிலிருந்து தகவல் வருவதற்கு முன்பு சம்பவம் இடத்திலிருந்து யாரும் தகவல் கொடுத்தார்களா என்றால் இல்லை. ஆய்வாளரிடம் கோப்புகளை எப்போது ஒப்படைத்தேன் என்றால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தவுடனே கொடுத்துவிட்டேன். வாக்குமூலம் பெற்ற போது யார் இருந்தார்கள் என்றால் நாகலட்சுமி, வசந்தாவும் இருந்தார்கள். புகார் எழுதி வைத்திருந்தார்களா என்றால் அம்மா வசந்தா சொல்ல சொல்ல நாகலட்சுமி எழுதினார். அரசு மருத்தவனைக்கு வாக்குமூலம் பெற எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் காலை 9.50 மணிக்கு சென்றேன். காவல் நிலையத்திற்கு எத்தனை மணிக்கு வந்தேன் என்றால் சுமார் 10.30 மணியிருக்கும். கொடுக்கப்பட்ட புகார் அசா 1 ன் கையெழுத்திற்கு கீழ் தேதி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அசா.ஆ.6 முதல் தகவல் அறிக்கையில் காலம் 14 ல் புகார்தாரருடைய கையெழுத்து இல்லை என்றால் புகார்தாரர் மருத்துவமனையில் இருந்ததால் கையொப்பம் பெறவில்லை. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்பு CSR பதிவு செய்யவில்லை என்றால் சரிதான்.

<u>மறு விசாரணை</u> :– இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 26.02.2026 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.02.26 18:25:40 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
26.02.2026